குமரி மாவட்டத்தை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டும். ஏனென்றால், குமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் வளர்ச்சியடைந்த தொழிற்சாலைகள் இல்லை. தொடர்ந்து நடைபெற முடியாத அளவிற்கு நிறைய Sick Industries இருக்கின்றன. அவற்றுக்கு உதவும்படியாக புதிய திட்டங்கள் ஏதாவது அரசிடம் உண்டா? அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில் கயிறு தொழில் செய்யக்கூடியவர்கள் இருக்கின்றார்கள். அந்தப் பகுதியில் கயிறு தொழிற்சாலை ஒன்றை அமைத்துத் தந்தால் நன்றாக இருக்கும். இது போன்ற புதிய திட்டங்களை எங்கள் மாவட்டத்திற்குத் தந்து ஒரு வளமான மாவட்டமாய் எங்கள் மாவட்டத்தை உருவாக்க வேண்டும்; வளமான தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கிறேன், வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் நாளை பதிலுரை வழங்குவார்கள்.*

6. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை, 3–4–2013 அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ நாளை (3–4–2013) அன்று தளர்த்தி, அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

2013 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

நாளை (3–4–2013) வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3–4–2013) புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

66. மானியக் கோரிக்கை எண் 44–குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

67. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

68. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய மக்கள் சாசனம், 2013–2014. (தமிழ், ஆங்கிலம்)

69. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் "தாய் திட்டம்" (தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்) என்கிற சிறு நூல். (தமிழ்)